# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
# அசல் வழக்கு எண். 62/2016

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | ரவிக்குமார் | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | அய்யமுத்து | தொழில் | .. | ஆட்டோ கன்சல்டன்சி |
| வயது | .. | 41 | ஜாதி | .. | வன்னியர் |
| கிராமம் | .. | தேவண்ணக்கவுண்டனூர் | நாள் | .. | 07.01.2021 |
| வட்டம் | .. | சங்ககிரி | | | |

வா.சா.1 – ரவிக்குமார் - பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

நான் என்ன படித்துள்ளேன் என்றால், 8 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால், ஆட்டோ கன்சல்டன்ட்டாக இருக்கிறேன். இந்த வழக்கின் முதல் வாதியான எனது தாயார் இன்று நீதிமன்றத்திற்கு ஆஜராகி இருக்கிறாரா என்றால், வந்திருக்கிறார். தொழில் நிமித்தமாக நான் கடந்த 20 ஆண்டுகாலமாக சேலம் சீலநாய்க்கன்பட்டியில் வசித்து வருகிறேனா என்றால், 10 ஆண்டு காலமாக வசித்து வருகிறேன். எனது குடும்ப அட்டை, ஆதார் அட்டை ஆகியவை சேலம் முகவரியில்தான் உள்ளது என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாணப்பத்திரிக்கையை படித்துவிட்டு, புரிந்து கொண்டதற்கு பிறகுதான் கையெழுத்து போட்டிருக்கிறேன் என்றால், சரிதான். அதில் உள்ள சங்கதிகள் எல்லாம் உண்மையானது, நான் சொன்னவைதான் என்றால், சரிதான். சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் 5வது பத்தியில் நான் அய்யமுத்துவின் மனைவி என்று சொல்லியிருக்கிறீர்கள், அது தவறா என்றால், தவறுதான், நான் அய்யமுத்துவின் மகன். 2 மற்றும் 3 வாதிகள் எனது மக்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள், அதுவும் தவறா என்றால், தவறுதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் அய்யமுத்து மனைவி சுமார் 60 வயதுள்ள பச்சியம்மாள் ஆகிய நான் தாக்கல் செய்யும் பிரமாண வாக்குமூலம் என்று தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு எனது தாயார் பெயர், வயது மற்றும் உறவு முறை மட்டும் அடிக்கப்பட்டு, அதில் எனது பெயர், வயது மற்றும் உறவுமுறை எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். எனவே, இந்த பிரமாணப்பத்திரிக்கையை எனது தாயார் சாட்சியம் அளிப்பதற்காக தயாரிக்கப்பட்டது என்று சொன்னால், சரிதான். எனவே, மேற்கண்ட பிரமாணப்பத்திரிக்கையில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை இல்லை என்பதாலும், அதற்குரிய சாட்சி நான் இல்லை என்பதாலும்

இந்திய சாட்சிய சட்டத்தின்படி பிரமாணப்பத்திரிக்கை நிராகரிக்கத்தக்கது என்று சொன்னால், நான் தான் போட்டேன். எனவே, பிரமாணப்பத்திரிக்கையில் கூறப்பட்டுள்ள சாராம்சங்கள் குறுக்கு விசாரணைக்கு உகந்த சாராம்சம் இல்லை என்று சொன்னால், நான்தான் சொன்னேன். எனவே எனது முதன்மை சாட்சியத்தை நிராகரிக்க வேண்டும் என்று சொன்னால், சரியல்ல.

ஒப்பம் / ரவிக்குமார்

ஒப்பம் / திருமதி. மு. பாக்கியம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.